# ஸ்ரீபாஷ்யகாரரின் நித்யக்ரந்தம்

சோகத்தூர் ராமாநுஜாச்சார், பெங்களூர்

श्रीमतां भाष्यकाराणां सहस्राब्दमहे सताम् । तद्ग्रन्थनवरत्नेषु नित्यस्य विषये मनाक् ॥

द्राविड्या विवृतिर्ह्येषा क्रियते महतां मुदे । प्रीयन्तां यतिराजास्ते तद्भक्ताश्च सदा मयि ॥

எம்பெருமானார் தாம் அனுக்ரஹித்த நவரத்னங்களைப் போன்ற ஒன்பது க்ரந்தங்களில் நித்யம் என்னப்படும் நூலும் ஒன்றாகும். எம்பெருமானுடைய கல்யாண குணங்களைக் கண்டு அவனிடம் பக்தி பூண்ட பரமைகாந்திகளுக்கு - பகவானுடைய திருவாராதன முறையை நன்கு விளக்கிக்காட்ட இந்த க்ரந்தத்தை அருளிச் செய்துள்ளார் ஸ்வாமி எம்பெருமானார். இது திருமாலை ஶரணம் அடைந்து பரமபதமாம் வைகுண்டத்தில் அவனுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்திட வேண்டி, பரமைகாந்தியான ஸ்ரீவைஷ்ணவன் தான் இங்கிருந்த நாள் முழுவதும் செய்யும் எல்லா ஶாஸ்த்ரீயமான செயல்களெல்லாம் எம்பெருமானின் கைங்கர்யமாக, அதாவது, தொண்டாகவே நினைத்துச் செய்தல் இன்றியமையாதது எனக் காட்டுவதற்காக எழுதப்பட்டது.

ஆழ்வார்கள் பகவத் ஆராதனத்தை = இறை (திருமால்) வழிபாட்டை, வாழ்வின் உயர்ந்த குறிக்கோளாகக் கூறியுள்ளனர். நம்மாழ்வார் - 'இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென் .... செந்தாமரைக்கண் என்னம்மாள் பொங்கேழ் புகழ்கள் வாயவாய், புலன்கொள் வடிவென் மனத்ததாய், அங்கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளிலே' என்றும், 'வணங்கி வழிபடும் ஈசன் பிணங்கி அமரர் பிதற்றும்', 'வகையால் மனமொன்றி மாதவனை நாளும் புகையால் விளக்கால் புதுமலரால் நீரால் திசைதோறு அமரர்கள் சென்றிறைஞ்ச நின்ற தகையான் சரணம் தமர்கட்கோர் பற்றே' என்றும், 'பூசும் சாந்து என் நெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய வாசகம் செய் மாலையே வான் பட்டாடையும் அஃதே தேசமான அணிகலனும் என் கைகூப்புச் செய்கையே ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த எந்தை ஏகமூர்த்திக்கே' என்றும், 'சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபம் தராநிற்கவே அங்கு ....' என்றும், குலசேகராழ்வார் - 'வன்புலன்களடக்கி இடர்பாரத்துன்பம் துறந்து இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலை நின்ற தொண்டரான' என்றும், திருமங்கை ஆழ்வார் - 'மறையாளர் நாளும் முறையால் வணங்க' என்றும், அமுதனார் 'அவர்க்கே எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தொழும்பும் சொல்லால் மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே' என்றும் இவ்வாறு பலர் பலவகைகளில் கூறியதையே அடிப்படையாகக் கொண்டு எம்பெருமானார் நித்யக்ரந்தத்தை அருளியுள்ளார்.

இதில் அவரவர்களின் வர்ணாஶ்ரமத்தை வர்ணம் (ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைஶ்யன், ஶூத்ரன்) மற்றும் ஆஶ்ரமம் (ப்ரஹ்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸி) அடிப்படையாகக் கொண்டு, அன்றாடம் செய்யும் படி ஶாஸ்த்ரம் இட்ட கட்டளைகளை எல்லாம் திருமாலின் தொண்டாகச் செய்யும் முறையை விவரித்திருக்கிறார். பகவத்கீதையில் எம்பெருமானான ஸ்ரீக்ருஷ்ணன் இதைக் கூறியுள்ளதை ஸ்ரீகீதாபாஷ்யத்திலும் நன்கு விவரித்து, அதை நடைமுறையில் நாமெல்லாம் கடைப்பிடிக்கும் முறையை இங்கு விளக்குகிறார்.

இது சிறிய நூலாயினும் மிகவும் உயர்ந்தது மற்றும் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியது. எனவே, இதனை 500க்கும் மேற்பட்ட ஶ்லோகங்களால் ஸ்ரீ வங்கிபுரத்து நம்பிகள் விரிவாக உரைத்திருக்கிறார். வங்கிவம்ஶேஶ்வர காரிகைகள் என அவை வழங்கப்படுகின்றன. ஸ்வாமி ஸ்ரீதேஶிகனும் ஸச்சரித்ரரக்ஷை முதலிய நூல்களில் இதன் பெருமையை விளக்கியுள்ளார்.

தொடக்கத்தில் பரமைகாந்தியுடைய பகவதாராதனமுறையைக் கூறுகிறேன் என மொழிந்துள்ளார். பரமைகாந்தியாவான், எம்பெருமானையே 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்று ஆழ்வார் அநுபவித்தபடி எல்லாமாகக் கொண்ட ஜ்ஞாநி எனும் பகவத்பக்தன். பகவானையே அண்டியிருந்து எந்த எதிர்பார்ப்புமின்றி அவனுக்கே தொண்டு பூண்டவன் என்றபடி.

ஆராதனமாவது - எம்பெருமானின் உகப்புக்காகச் செய்யும் கிரிசைகள். அதாவது, உள்ளம், உரை, செயல் என்ற மூன்று கருவிகளாலும், வழியுடன், இட்ட கட்டளைகளை நிறைவேற்றல். முறையாவது, தனக்குத் தோன்றியபடி செய்திடாது, ஶாஸ்த்ரம் கைவிளக்காகக் கொண்டு, 'மேலையார் செய்வனகள்' என்றபடி, விலக்குமவற்றை விலக்கி, செய்ய வேண்டுமவற்றைச் சொன்ன முறை தவறாது செய்திடல்.

பிறகு, எம்பெருமானின் தொண்டே தன் ஒரே எண்ணமாகக் கொண்டு, எம்பெருமானே தனக்கு எல்லா வகையிலும் அடிமையான என்னால் தன்னுடையதான என் உள்ளம், உடல் முதலியவற்றால் தன்னுடைய ஔபசாரிக-ஸாம்ஸ்பர்ஶிக-ஸாந்த்ருஷ்டிக-ஆப்யவஹாரிகாதி ஸமஸ்தபோகாந் - மிகச்சிறந்த, மங்களகரங்களான உபசாரங்கள், தொடுதல், உட்கொள்ளுதல், 'ஔபசாரிகம் - உபசாரத்திற்கான குடை முதலானவை. ஸாம்ஸ்பர்ஶிகம் - திருமேனியில் ஸ்பர்ஶிக்கக்கூடிய அர்க்யம் பாத்யம் முதலியன. ஆப்யவஹாரிகம் - நிவேதநத்திற்குரிய அன்னம், பழம் முதலியன. ஆதிபதத்தினால் ஸாந்த்ருஷ்டிகம் - காட்டுதல் - கண்ணுக்கு விஷயமாகக் கூடிய கற்பூரஹாரத்தி (நீராஜநம்), கேட்பித்தல் முதலியன. (அல்லது, ஔபசாரிகங்கள் - நீராஜநம் (கற்பூரஹாரத்தி) முதலியன. ஸாம்ஸ்பர்ஶிகங்கள் - மாலை சந்தனம் முதலியன, 'ஆதி பதத்தினால் ஸாந்த்ருஷ்டிகங்களான தீபம் முதலியன, காதுகளால் கேட்டு மகிழக்கூடிய மந்த்ரோச்சாரணம் முதலான ஸாம்ஶ்ரவணிக போகங்களைக் கொள்ளலாம்.) ஆகியவகைகளான போகங்களை - உகப்புகளை, தன் எல்லா அடியவர்களுடனும், மண்டப, ஆயுத, அணிகலன்கள் முதலியவற்றுடனும் கூடிய தன்னை மகிழ்வித்துக் கொள்ள வேண்டி தொடக்கி வைக்கிறான் என நினைத்து, நீராடும் இடத்துக்குச் - நீர்நிலைக்குச் - சென்று, தூய இடத்தில், கால்களை அலம்பிக் கொண்டு, ஆசமனம் செய்து, குளம், நதி முதலிய நீர்நிலையின் கரையை நன்கு ஶுத்தப்படுத்தி, தூய இடத்திலிருக்கும் மண்ணை மூலமந்த்ரத்தால் எடுத்துக் கொண்டு, இரண்டாகப் பிரித்துக் கொண்டு, அலம்பிய கரையில் வைத்து, இரண்டில் பெரிய பகுதியினால் உடலின் அழுக்கை போக்கிக்கொண்டு, முழுகி, ஆசமனம் செய்து, உட்கார்ந்து பகவானை த்யானித்துக் கொண்டு மூன்று ப்ராணாயாமம் செய்து, மற்ற மண் பகுதியை எடுத்து, இடது கையில் வைத்து மூன்றாகப் பிரித்து, தனித்தனியாக ப்ரோக்ஷித்து, அபிமந்த்ரணம் செய்து, ஒரு பகுதியைக் கொண்டு அஸ்த்ரமந்த்ரத்தால் திக்பந்தனம் (திசைகளைக் கட்டுதல்) இரண்டாவதால் தண்ணீருக்கு பீடம் (இருக்கை) மற்றும் மூன்றாவதால் உடலைப் பூசுதல் செய்திட வேண்டும்.

பின்னர், கைகளை அலம்பி, உள்ளங்கையில் தண்ணீரைக் எடுத்துக் கொண்டு, நீர்நிலைக்கு அர்க்யத்திற்காக உயரே எறிதல், எம்பெருமானின் இடது திருவடி கட்டை விரலிலிருந்து பெருகும் கங்கையின் ஜலத்தை அந்த நீர்நிலையில் ஸங்கல்பித்த பீடத்தில் அழைத்து, மூலமந்த்ரத்தால் அபிமந்த்ரித்து, கைகளில் நீரை எடுத்து ஏழுமுறை அபிமந்த்ரித்து, தன் தலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மூன்று, ஐந்து, அல்லது ஏழு முறைகள் செய்ய வேண்டும்.

வலது கையால் நீரை எடுத்து அபிமந்த்ரித்து, பருகி, ஆசமநம் செய்து, தன்னை ப்ரோக்ஷித்துக் கொண்டு, நீரில் அமிழ்ந்து, எம்பெருமானின் திருவடிகளில் தன் தலை இருப்பதாக நினைத்து, முடிந்த வரை மூலமந்த்ரத்தை ஜபித்து, மேலெழுந்து, வெண்துணியை அணிந்து, உத்தரீயத்தையும் உடுத்து, ஆசமனம் செய்து, பன்னிரு திருமண்காப்புகளை அந்தந்த மந்த்ரங்களால் அணிந்து, பகவானை

நினைத்து, அந்தந்த மந்த்ரங்களால் எம்பெருமான் வரையில் குறிக்கும் மூலமந்த்ரத்தால் நீரைப் பருகி, ஆசமனம் செய்து, ப்ரோக்ஷித்து, பரிஷேசனம் நீரைச் சுற்றுதல் செய்து, கைகளில் நீரை எடுத்துக் கொண்டு, எம்பெருமானின் திருவடிகளில் சேர்த்து, ப்ராணாயாமம் செய்து, பகவானை த்யானித்து, 108 முறை மூலமந்த்ரத்தை ஜபித்து, ப்ரதக்ஷிணம் செய்து, ஸேவித்து, ஆதாரஶக்தி தொடங்கி ப்ருதிவீ வரையில் தர்ப்பணம் செய்து, ஸ்ரீவைகுண்டத்தில் பாரிஷதர்கள் வரையில் தர்ப்பித்து, தேவர்களையும், ரிஷிகளையும், பித்ருக்களையும் பகவானின் ஶரீரமாக நினைத்து தர்ப்பணம் செய்து, ஶுத்தமான இடத்தில் ஸ்நாநஶாடி துணியைப் பிழிந்து, ஆசமனம் செய்து, ஸ்நாநத்திற்காக அழைத்த தீர்த்தத்தை தேவதையை தன்னுள் மூலமந்த்ரத்தால் கலந்து விட்டு, யாகபூமிக்குச் செல்ல வேண்டும். யாகம் = திருவாராதனம், பூமி = ஶாலை.

கைகால்களை நன்கு அலம்பிக் கொண்டு, ஆசமனம் செய்து, ஶுத்தமான, மிகவும் மனதுக்குப் பிடித்த, சத்தமில்லாத இடத்திலிருந்து மண்ணை எடுத்துக் கொண்டு, அதை ஶோஷண, தாஹந, ப்லாவநங்களால் ஶுத்தப்படுத்தி, குருபரம்பரையின் வாயிலாக, பரமாசார்யனான பகவானை அசைந்து, அவனையே அடையத்தக்கவனாகவும், அடைவிப்பவனாகவும், எல்லா அநிஷ்டங்களையும் போக்குபவனாகவும், உள்ளபடியே அவனுடைய ஸ்வரூப, ரூப, குண, விபூதி, லீலோபகரணங்களை விரிவாக நினைத்து, அவனையே 'அகில ஹேய ....' என்று தொடங்கும் கத்யத்தால் ஶரணம் புக வேண்டும்.

இவ்வாறு ஶரணம் புக்கு, அவனுடைய திருவருளால் வளர்க்கப்பட்ட மனநிலையுடன் அந்த ஸர்வேஶ்வரனான பகவானையே தனது ....யாக நினைத்து, மிகவும் விரும்பத்தக்க, ஒழிவற்ற, மிகத்தெளிவான, கண்ணுக்குத் தெரியுமதைப் போன்ற, த்யானத்தால் த்யானித்திருக்க வேண்டும்.

பிறகு, அந்த அனுபவத்தால் பிறந்த, மிகுந்த ப்ரீதியால் உந்தப்பட்ட முழுமையான கைங்கர்யமயமான திருவாராதனத்தைத் தொடங்க வேண்டும்.

ஸங்கல்பம் - எம்பெருமானே தன்னால் ஏவப்பட்ட இருப்பு, நிலை, செயல், கொண்ட, தனக்கே ஶேஷமான (தனக்காகவே உள்ள) இந்த ஆத்மாவினால், அடியேனால், தன்னுடையதான உடல், புலன்கள், மனது, தன்னுடையதே ஆன மிக உயர்ந்த, மங்களமான, த்ரவ்யங்களாலான ஸாம்ஸ்பர்ஶிகம் முதலிய, மிகப்பெரிய, மிக ப்ரியமான, மிக நிறைந்த, மிகவும் பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்ட எல்லா போகங்களையும் எல்லா பரிஜநர், (நித்யர், முக்தர் முதலிய சுற்றத்தார்) பரிச்சதங்களுடன், (அணிகலன், ஆயுதங்கள், லோக, தேஶ, நகர, விமான, மண்டபம் முதலியன) கூடிய தனக்கே, தன் உகப்பின் பொருட்டே, தானே ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பிக்கிறான் என்று நினைத்து, தன் உடல் பூதஶுத்தியின் மூலமாக அப்ராக்ருதமாக ஆவதாகக் கருதி, அதனால் பகவானை ஆராதிப்பதாக நினைத்து யாகத்தை திருவாராதனத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இதற்காக பூதஶுத்தி செய்யும் முறை நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதில் தற்போதைய, ப்ராக்ருதமான, ஐந்து பூதங்களாலும், ஸத்த்வம், ரஜஸ், தமஸ்ஸாகிய மூன்று குணங்களாலுமான, உடலில் ஐந்து உபநிஷத்து மந்த்ரங்களை ஸம்ஹாரமுறையில் ந்யாஸம் செய்து - வைத்து, பிறகு, வாயு, அக்நி, ஜல பீஜங்களால் உடலின் எல்லா தத்த்வங்களையும் முறைப்படி உள்ளும் புறமும் உலர்த்தி, கொளுத்தி, பகவானின் வலது திருவடிக்கட்டை விரலின் கீழ் இருத்தி, தன் ஆத்மாவையும் சேர்த்து, அத்திருவடியின் கட்டைவிரல் நகத்திலிருந்து பெருகி வரும் அமுதமயமான வெள்ளத்தினால் ஆத்மாவை, தன்னை, நனைத்து, பிறகு ஶுத்த ஸத்த்வமயமான, அப்ராக்ருதமான, உடல் கிடைத்ததாக நினைத்து, அதில் ஐந்து உபநிஷத்துகளென்கிற மந்த்ரங்களை ஸ்ருஷ்டி முறையில் ந்யாஸம் செய்ய (வைக்க), வேண்டும். இந்த ஸ்ருஷ்டி ந்யாஸத்துக்குப் பிறகு, அந்த ஐந்து ஶக்திகளாலான திவ்யமான தேஹம் உண்டானதாக த்யாநித்து, மீண்டும் எம்பெருமானின் இடது திருவடி கட்டை விரலிலிருந்து பெருகும்

அமுதவெள்ளத்தால் தன்னை நீராட்டி, அவன் சக்கரப்பொறியையும் பன்னிரு திருமண் காப்புகளையும் அணிந்து திருவாராதனத்தைத் தொடங்க வேண்டும்.

பிறகு, திருவாராதனத்துக்குத் தேவையான அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், ஸ்நாநீயம், ஸர்வார்த்த தோயம் என்னும் ஐந்து பாத்ரங்களையும் முறையாக ஏற்படுத்தி, அவைகளை உலர்த்தல், கொளுத்தல், நனைத்தல் மூலமாக அப்ராக்ருதமாக்கி, அவற்றில் நீரை நிரப்பி, குறிப்பிட்ட த்ரவ்யங்களை சேர்க்க வேண்டும்.

பிறகு, ஆதாரஶக்தி தேவதைகளை அவரவர்களின் இடங்களில் இருத்தி, பூஜித்து, வணங்கி, அவர்களின் அனுமதி பெற்று பகவானை ஆராதிக்க வேண்டும்.

அதாவது, உலகுக்கு ஆதாரமான ஶக்தி, மூலப்ரக்ருதி, கூர்ம (ஆமை) உருவத்தில் இதையெல்லாம் தாங்கும் பகவான் முதலியன, வைகுண்டமெனும் திவ்யலோகம், ரத்நமண்டபம், ஆதிஶேஷன், தர்மம் முதலிய பீடம், அதன் மேல் தாமரை, சாமரம் ஏந்தியவர்கள், பகவான், அவ்வாறே பிராட்டிமார், வெவ்வேறு கைங்கர்யங்களைச் செய்யும் நித்யர்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள், ஶேஷன், பாதுகை, கருடன், விஷ்வக்ஸேநர், த்வாரபாலகர்கள், குமுதர் முதலிய கணங்கள், விஷ்ணுபக்தர்களான பார்ஷதர்கள் எனச் சொல்லியிருக்கும் பலவகை தத்த்வங்களின் அபிமாநி தேவதைகள்.

பிறகு, பகவானை தனக்குப் பிடித்தமான பரமபதம், க்ஷீராப்தி, ஸூர்யமண்டலம், தன் இதயம், மதுரை, த்வாரகை, அயோத்யை, முதலிய பகவதவதார க்ஷேத்ரங்கள், மற்றுள்ள ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேஶங்கள் இவற்றிலிருந்து, எழுந்தருள வேண்டுதல், செய்து ஆஸநங்கள் வாயிலாக ஆராதிக்க வேண்டும்.

இவ்வாறு விரிவாக சொல்லப்பட்ட விஷயங்களில், குறிப்பாக ஆறு ஆஸநங்கள் உள்ளன. முதலாவது, மந்த்ராஸநம். இரண்டாவது ஸ்நாநாஸநம். மூன்றாவது அலங்காராஸநம். நான்காவது போஜ்யாஸநம். ஐந்தாவது புநர்மந்த்ராஸநம். ஆறாவது பர்யங்காஸநம்.

மந்த்ராஸநத்தில், ஆஸதம் ஸமர்ப்பித்து, ப்ரார்த்தித்து, அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம் முதலியன ஸமர்ப்பிக்க வேண்டும். இவை எல்லா ஆஸநங்களுக்கும், உபசாரங்களுக்கும் பொதுவானவை.

ஸ்நாநாஸநத்தில், மேற்கூறியவற்றுடன் பாதுகை, ஸ்நாநஶாடி, திருவடிகளுக்கு மேடை, பல் தேய்த்து விடுதல், நாக்கு வழித்தல், வாய் கொப்பளித்து விடுதல், கண்ணாடி காட்டல், கை அலம்புதல், முகவாசம், வெற்றிலை பாக்கு, எண்ணை தடவுதல், அரப்பிடுதல், நெல்லிக்கடார நீர், துவட்டல், மஞ்சள் காப்பு, நீரால் கழுவுதல், வஸ்த்ரம், யஜ்ஞோபவீதம், பவித்ரம், பாட்டு, நர்த்தனம், வாத்யம், மங்களப்பொருட்கள், கூடிய திருமஞ்சனம், ஹாரத்தி, திருமேனி துடைத்தல், உலர்ந்த வஸ்த்ர, உத்தரீயம் (திருக்கூறை), ஸமர்ப்பித்தல் சேரும்.

அலங்காராஸநத்தில், அதிகப்படியாக, முந்திய பாத்ரங்களின் தீர்த்தத்தை ப்ரதிக்ரஹபாத்ரத்தில் சேர்த்து விட்டு, மறுபடி ஐந்து பாத்ரங்களை ஏற்படுத்தல், ஸ்நாநீயத்தில் பாநீயம் கல்பித்தல், சந்தனக்காப்பு, புதுமலர்கள், புகை, விளக்கு, வஸ்த்ரம், உத்தரீயம், ஆபரணங்கள், பூணூல், அலங்காரம், திருமண் காப்பு, மையிடல், கண்ணாடி, கொடி, குடை, சாமரம், வாஹநம், சங்கு, காளம், பேரீ, முதலிய எல்லா நாட்டிய, கீத, வாத்யங்கள், மந்திரமாமலர் - வேத, ப்ரபந்த, இதிஹாஸபுராண, ஸ்தோத்ரம் போன்ற சொல் மாலைகள் - புஷ்பார்ச்சனை, மூலமந்த்ரஜபம், மாத்ராதானம் ஸமர்ப்பித்தல்.

போஜ்யாஸநத்தில், வெந்நீர், வெல்லம், தேன், நெய், தயிர், பால், மதுபர்க்கம், நறுநெய் கலந்த நன்கு சமைத்த அன்னம், கறியமுதுகள், பழங்கள், கிழங்குகள், பணியாரங்கள், ஶாஸ்த்ரப்படி எம்பெருமானுக்கு

ஏற்கும் அறுசுவை உடைய உயர்ந்த தின்பண்டங்கள் முதலியன கண்டருளப்பண்ணுதல் (நிவேதனம்), தாகம்தீர் நீர் தருதல், திருக்கை அலம்புதல், துடைத்தல், சந்தன, முகவாஸம், தாம்பூலம் முதலியன ஸமர்ப்பித்தல்.

மறுபடி மந்த்ராஸநம் முன்போலவே. கற்பூர மங்களஹாரத்தி, சாற்றுமுறை முதலியன.

பர்யங்காஸநத்தில், மாலை, ஆபரணம், வஸ்த்ரம் முதலியவற்றைக் களைந்து, விஷ்வக்ஸேநருக்குக் கொடுத்து, திருப்பள்ளி கொள்தற்கு ஏற்ற படுக்கை, வஸ்த்ரம், தகுந்த அணிகலன்கள், உபவீதம் முதலியன ஸமர்ப்பித்து, ஸாத்விக த்யாகம் செய்தல் - எம்பெருமானே தன்னால் ஏவப்பட்ட இருப்பு, நிலை, செயல், கொண்ட, தனக்கே ஶேஷமான - தனக்காகவே உள்ள - இந்த ஆத்மாவினால் (அடியேனால்), தன்னுடையதான உடல், புலன்கள், மனது, தன்னுடையதே ஆன மிக உயர்ந்த, மங்களமான, த்ரவ்யங்களாலான ஸாம்ஸ்பர்ஶிகம் முதலிய, மிகப்பெரிய, மிக ப்ரியமான, மிக நிறைந்த, மிகவும் பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்ட எல்லா போகங்களையும் எல்லா பரிஜநர், (நித்யர், முக்தர் முதலிய சுற்றத்தார்) பரிச்சதங்களுடன், (அணிகலன், ஆயுதங்கள், லோக, தேஶ, நகர, விமான, மண்டபம் முதலியன) கூடிய தனக்கே, தன் உகப்பின் பொருட்டே, தானே ஏற்படுத்திக் கொண்டான் என்று நினைத்து, எம்பெருமானிடம் விடை பெற்று, பகவானுக்கு நிவேதனம் செய்ததின் மீதியை சிறிது விஷ்வக்ஸேநருக்கு, ஸமர்ப்பித்து, பூஜித்து, மற்றதை ஆசார்யர்கள், ஶ்ரீவைஷ்ணவர்கள் முதலியோர்க்கு ஸமர்ப்பித்து, ஸாஷ்டாங்கமாக = எட்டு அங்கங்கள் (மார்பு, தலை, உடல், மனது, பேச்சு, கால்கள், கைகள், முழங்கால்கள்) தரையில் படும்படி - ஆறுமுறைகளுக்குக் குறையாமல் தெண்டன் ஸமர்ப்பித்து, ஶரணமடைதல்.

இவ்வாறு திருவாராதனம் நிறைவு பெறுகிறது.

मनोवाक्काययोगेन यत्करोमि सदा हि तत् । कैङ्कर्यं स्याच्छ्रीपतेरित्याशासे नित्यकिङ्करः ॥

आत्माभिमानानुगुण-पुरुषार्थव्यवस्थया । भगवत्पारतन्त्र्यादिः प्रियः स्यान्मे सदा हरे ॥

ஶுபமஸ்து